**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 11** **Date : 20.05.2025.**

| | |
|---|---|
| **Name : தங்கராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது சேலம் மாநகர ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 25.10.2022-ம் தேதி ரேவதி க/பெ அருள்பாண்டியன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.560/2022 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும்.**

2) பிறகு முதல்தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை அடிப்படையில், நான் கடந்த 25.10.2022-ம் தேதியன்று மதியம் 03.00 மணிக்கு சம்பவயிடம் மேச்சேரி சாலை மேச்சேரி அரசு மருத்துவமனை அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் இளவரசன், அறிவழகன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆகும்.**

3) பிறகு சாட்சிகள் பூபாலன், ரஞ்சித், நல்லதம்பி, இளவரசன், அறிவழகன், ராஜ்குமார், ராகவன், செல்வராஜ், மாரியப்பன் ஆகியோரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட அருண்பாண்டியன் என்பவர் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் காயம்பட்ட அருண்பாண்டியன் என்பவர் 25.10.2022–ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிறகு பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் சண்முகம் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

4) வழக்கு கோப்பை என்று ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் அவர் என்று என்னை விசாரித்தார் என்றால் 26.10.2022ம் தேதி வழக்கு கோப்பை ஆய்வாரிடம் ஒப்படைத்தேன். அன்றையதினமே என்னை அவர் விசாரித்தார்.அ.சா.1 ரேவதி காவல் நிலையம் வரும் போதே புகார் எழுதி வந்தாரா, அல்லது காவல் நிலையத்தில் வைத்து புகார் எழுதினாரா என்றால் வரும் பொழுதே புகார் எழுதி வந்தார். விபத்து நடந்த இடம் காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்றால் 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

5) பொதுவாக ஒரு விபத்து ஏற்பட்டவுடன் மருத்துவமனையிலிருந்து விபத்து குறித்த தகவல் வருமா என்றால் தகவல் வரும். இந்த வழக்கில் விபத்து குறித்த தகவல் காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்டதா என்றால் வழக்கு கோப்பில் அது பற்றிய குறிப்புகள் இல்லை. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான மாரியப்பன், ராஜ்குமார், ராகவன் ஆகிய மூவரும் காவல் நிலையம் அருகே உள்ள ஆம்புலன்ஸ் டிரைவர்கள் என்றால் சரிதான்.

6) பார்வை மகஜர் சாட்சியான இளவரசன் என்பவரை நான் விசாரிக்காத காரணத்தால் தான் அவர் நீதிமன்றத்தில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன்.

7) விபத்துக்குள்ளான இரு சக்கர வாகனத்திற்கு எங்கெங்கு சேதாரம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் நான் தெரிந்து கொள்ளவில்லை. ஆய்வாளர் தான் புலன் விசாரணையின் போது பார்த்தார். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான நபர்களுடைய பெயர்களை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எவ்வாறு சம்பவம் குறித்து தெரிந்து கொண்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

8) புகார்தாரருக்கு போன் மூலமாக தகவல் சொன்னவர் பெயரை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். ஜமுனா என்பவர் என் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்தாரா என்றால் CCTNS வேலை செய்து வந்தார். அவர் புகார்தாரருக்கு உறவு முறை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு உறவு முறை என்று தெரிந்து கொண்டு அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இரு சக்கர வாகனத்தின் மீது இன்னொரு இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன்.

9) எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை எந்த வித சைகையும் செய்யாமல் அதிவேகமாக, வலது புறமாக திருப்பிய போது அந்த பக்கம் வந்த விபத்தில் இறந்து போன நபர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். என் விசாரணையில் அ.சா.2 மாரியப்பன், அ.சா.3 ராஜ்குமார், அ.சா.4 ராகவன் ஆகியோர்கள் எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை வலது புறமாக திருப்புவதற்காக நின்றிருந்தவர் மீது Passion Pro இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் இடித்து விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்களா என்றால் அவ்வாறு இல்லை.

10) இந்த வழக்கில் இறந்து போன நபர் தான் சரியாக பார்க்காமல் எதிரியின் இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அ.சா.1ன் உறவினர் ஜமுனா என்பவர் காவல் நிலையத்தில் வேலை செய்வதால்

அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெற்று இருந்தால் எதிரியின் இரு சக்கர வாகனத்தின் முன்புறமாக ஏதேனும் சேதம் ஏற்பட்டிருக்கும், ஆனால் அவருடைய இரு சக்கர வாகனத்தின் சைலன்சர் பகுதியில் மட்டும் தான் சேதம் ஏற்பட்டதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

11) எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும், நான் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.